பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

11 04 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவை நீக்கியதன் மூலம் ஒரே நாடு ஒரே அரசியல் சாசனம் என்ற நிலையை மத்திய அரசு உருவாக்கியுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- அஇஅதிமுக, பிஜேபி-க்கு மறைமுகமாக ஆதரவு அளிப்பதாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.
- திமுக ஆட்சியில் விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- புனித ரமலான் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் குஜராத் அணி மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள்--

**[]<<<>>>[]**

தமிழகம் உட்பட முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு தங்களது வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நேற்று தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவை நீக்கியதன் மூலம் ஒரே நாடு ஒரே அரசியல் சாசனம் என்ற நிலையை மத்திய அரசு உருவாக்கியுள்ளதாக கூறினார்.

அரசியல் சாசனத்தை உருவாக்கிய டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கருக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின்போதுதான் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

சமூகத்தில் மிகவும் பின்தங்கிய ஷெடியூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக மத்திய அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டார்.

அயோத்தியில் பாலராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட நிகழ்ச்சியை ஐ என் டி கூட்டணி புறக்கணித்ததோடு, சனாதன தர்மத்தை அழிக்க முற்படும் சக்திகளின் பின்னால் அணிவகுப்பதாகவும் பிரதமர் குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழகத்திற்குத் தேவையான நிதியை பிஜேபி அரசு ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சித்ததாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ப சிதம்பரம் குற்றம்சாட்டியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மத்தியில் காங்கிரஸ் அல்லது பிஜேபி கட்சிகளால்தான் ஆட்சி அமைக்க முடியும் என்றும், அஇஅதிமுக வெற்றிபெற்றாலும் அதற்கு வாய்ப்பு இல்லை என்றும் கூறினார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது காளையார்கோவில் நூற்பாலை புதுப்பிக்கப்பட்டதாகவும், தற்போது அந்த ஆலை மூடப்பட்டுள்ளதாகவும் திரு ப சிதம்பரம் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அஇஅதிமுக, பிஜேபி-க்கு மறைமுகமாக ஆதரவு அளிப்பதாக திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

பெரியகுளம் அருகே நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், தங்கள் மீதுள்ள வழக்குகளிலிருந்து தப்பித்துக் கொள்ள அஇஅதிமுக, பாமக உள்ளிட்ட கட்சிகள் பிஜேபி ஆதரவு நிலையை எடுத்துள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

மத்தியில் ஐ என் டி ஏ கூட்டணி ஆட்சி அமைத்தால் முல்லைப் பெரியாறு மற்றும் பேபி அணை பலப்படுத்தப்படும் என்றும், திண்டுக்கல் – சபரிமலை அகல ரயில்பாதைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

தேனியில் விளையும் வாழை மற்றும் திராட்சை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி சந்தைப்படுத்த மாநில அரசு விவசாயிகளுக்கு உதவிடும் என்றும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சரக்கு மற்றும் சேவை வரி காரணமாக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருப்பூரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், திமுக ஆட்சியில் விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அஇஅதிமுக ஆட்சியின்போது இவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் அதிக அளவில் தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டதால், ஏராளமான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

கடந்த பத்து ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்கள் தொடர மத்தியில் மீண்டும் பிஜேபி ஆட்சி அமைய வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் கூறியுள்ளார்.

கோவில்பட்டியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அனைத்து மாநிலங்களுக்கும் பாரபட்சமின்றி தேவையான நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்ததாகத் தெரிவித்தார்.

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கும் பிரதமர் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுள்ளார் என்றும், அவரது திட்டங்கள் நிச்சயம் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றியை தேடித்தரும் என்றும் திரு ஜி கே வாசன் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

பல்வேறு விஷயங்களில் காங்கிரஸ், பிஜேபி கட்சிகளுக்கு இடையே ஒருமித்த கருத்து நிலவுவதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு சீமான் கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், மாற்றுக் கொள்கைகளுடன் மக்களை சந்திக்கும் ஒரே கட்சி நாம் தமிழர் கட்சி என்றார்.

சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளுக்குக் காரணமாக உள்ள மதுக்கடைகளை மூட வேண்டுமென்றும், திரு சீமான் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

இனி தேர்தல் களம்,

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது சிவகங்கை மக்களவைத் தொகுதி

*(வாய்ஸ் பைட் - முருகன் - 84 செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

புனித ரமலான் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது,

இந்நாளையொட்டி இஸ்லாமிய மக்கள் மசூதிகளிலும், ஈத்கா மைதானங்களிலும் சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்கள் பலர் இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ஒருமாதம் நோன்பிருந்து அதனை துறக்கும் நாள் ரமலான் திருநாளாக கொண்டாடப்படுகிறது என்றும், இந்நாள் சமூகத்தில் அன்பு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

இந்நாள் ஒற்றுமை, கருணை, கொடை ஆகியவற்றை வலியுறுத்துவதாகவும், ஏழை மக்களுக்கு உதவுவதன் மூலம் தங்கள் மகிழ்ச்சியை மற்றவர்களுடன் இஸ்லாமியர்கள் பகிர்ந்து கொள்வதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தமது வாழ்த்துச் செய்தியில் ரமலான் பண்டிகை நாட்டின் பன்முக கலாச்சாரத்தை எதிரொலிப்பதாகக் கூறியுள்ளார்.

இந்த பண்டிகை மக்களிடையே கருணை, ஒற்றுமை, பெருந்தன்மையை வளர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மக்களிடையே அமைதி, கருணை, ஒற்றுமை ஆகியவற்றை இப்பண்டிகை கொண்டுவரட்டும் என்று கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தமது பதவியை காப்பாற்றிக் கொள்வதற்காக காஸா போரை பயன்படுத்திக் கொண்டதாக அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் குற்றம்சாட்டியுள்ளார்.

**[]<<<>>>[]**

இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் மத்திய காஸா பகுதியில் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் இஸ்மாயில் **Haniyeh** குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

சுரங்கம் மற்றும் தாதுப் பொருட்கள் உற்பத்தித்துறையில் ஆராய்ச்சி மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளை உருவாக்குவது தொடர்பாக சிறப்பு இணையவழி கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் புதுதில்லி ஜவஹர்லால் பல்கலைக்கழகம் 20-வது இடத்தை பெற்றுள்ளது.

**[]<<<>>>[]**

பெரம்பலூர், புதுக்கோட்டை தொகுதியில் வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பதிவேற்றும் பணி நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் உறுதிமொழி ஏற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

**[]<<<>>>[]**

சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகளில் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள நுண்பார்வையாளர்களுக்காக இன்று நடைபெறும் பயிற்சி வகுப்பில் அனைவரும் தவறாமல் கலந்து

கொள்ள வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலர் திரு ஜெ ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் திடீரென தீப்பிடித்து எரிந்தது குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் குஜராத் அணி மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் மூன்று விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி ஏழு விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இன்று இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 4-1 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – மோகன்பெஹான் அணியை எதிரகொள்கிறது.

[]<<<>>>[]